## காலி மரபுரிமை மன்றம் - 2016

காலி மரபுரிமை மன்றத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 7 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்ற அதிகாரச்சட்டத்தின் 13(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் காலி மரபுரிமை மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து காலி மரபுரிமை மன்றத்தின் 2016 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது அட்டுறு அடிப்படை பின்பற்றப்பட வேண்டிய போதிலும், நிலையான வைப்புக்கள் வட்டி வருமானம் காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் காசு மற்றும் காசுக்கு சமமானவையாக குறிப்பாக காசுப் பெறுமதிக்கு இலகுவாக மாற்றக்கூடிய குறுங்கால, உயர் திரவத் தன்மை கொண்ட முதலீடுகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய போதிலும், இந்த நியமத்திற்கு முரணாக மன்றத்தின் கணக்கீட்டு கொள்கைக்கமைய 3 வருட நிலையான வைப்பு முதலீடு காசு மற்றும் காசுக்கு சமமானவையாக இனங்காணப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிப்நாரா சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்குவதற்காக 2015/2016 ஆம் ஆண்டுகளுக்காக பெறவேண்டிய ரூபா 78,400 தொகையான குத்தகை பணம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பெறவேண்டிய வருமானங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 34,999,633 தொகையான கட்டிடப் பெறுமதியினுள் மன்றத்திற்குரிய ஆதனமொன்றில்லாத கோட்டை மதிலின் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 32,664,052 தொகையான செலவினங்கள் உள்ளடங்குவதுடன், இந்த செலவினங்களும் நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(இ) நிதிக்கூற்றுக்களுக்கமைய மீளாய்வாண்டிற்குரிய நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு ரூபா 278,963 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டிற்கமைய அந்த பெறுமதி ரூபா 1,919,787 ஆனமையால் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 1,640,824 இனால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுக்குரிய கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட பிரதான பேரேட்டின் மீதிகள் மற்றும் பரீட்சை மீதியின் மீதிகளுக்கிடையே 20 கணக்குகளுக்குரிய ரூபா 3,667,218 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை**

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயங்களின் எதிரேயும் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் | 38,915,163 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| (ஆ) ஏனைய பெறவேண்டிய கணக்குகள் | 1,194,048 | பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகளுக்கான பட்டோலை மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழ் காலப்பகுப்பாய்வு |
| (இ) ஏனைய செலுத்த வேண்டிய கணக்குகள் | 1,889,242 | |

(ஈ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுக்குரிய அனைத்து பேரேட்டுக் குறிப்புக்களும் அதற்குரிய எழுத்துமூல தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், கணக்கீட்டு கட்டமைப்பினுள்ளும் பரிசோதனை செய்வதற்கு எவ்வித வசதிகளும் இல்லாதிருந்தது. அதற்கமைய கணக்குகளினதும் பேரேட்டுக் குறிப்புக்களினதும் சரியான தன்மை தொடர்பில் கணக்காய்விற்கு சிக்கலுக்குரியதாக இருந்தது.

**2.3 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

2016 ஒக்தோபர் 27 ஆந் திகதி ரூபா 12,000,000 தொகையான மூன்று வருடங்களில் முதிர்வடையும் புதிய முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 756 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பொருட்களின் சரி பிழைகளை பார்ப்பதைப் போன்றே, பயன்படுத்த முடியாத பொருட்கள் பற்றி அறிக்கையிடுவதற்கு வருடாந்தம் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மன்றத்தினால் 2013 ஆம் ஆண்டின் பின்னர் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியளவில் அவ்வாறான சொத்துக்களின் பெறுமதி ரூபா 38,915,163 ஆகும்.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மன்றத்தின் நிதி விளைவுகள் ரூபா 3,258,813 ஆன மிகையாக இருந்ததுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,090,324 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,168,489 இனால் அதிகரித்திருந்தது. அமைச்சிடமிருந்து கிடைத்த மானியங்கள் ரூபா 1,775,000 இனால் அதிகரித்திருந்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 வருடங்களின் நிதி விளைவுகளை பகுத்தாராய்ந்து பார்க்கும் போது 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 545,882 ஆகக் காணப்பட்ட மிகையானது, 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 2,824,939 ஆன பற்றாக்குறையொன்றிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் மிகையானது தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஆகியவற்றை கவனத்திற் கொள்ளும் போது மன்றத்தின் பங்களிப்பானது 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2013 ஆம் ஆண்டின்போது குறைவடைந்திருந்ததுடன், 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 7,263,063 தொகையான பங்களிப்பு மீளாய்வாண்டு வரையிலும் ரூபா 11,151,762 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

### 3.2 மன்றத்திற்கு எதிராக அல்லது மன்றத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

2011 ஆம் ஆண்டின் போது தற்காலிகமாக ஆட்சேர்க்கப்பட்ட பெண் ஊழியர் ஒருவரை சேவையிலிருந்து அகற்றியதன் பின்னர் அவரை மீண்டும் சேவையில் அமர்த்துமாறு கோரி மன்றத்திற்கு எதிராக தொழில் நீதிமன்றத்தில் 2012 திசெம்பர் 21 ஆந் திகதி வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்ததெனினும், இது தொடர்பில் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த வழக்கிற்காக 2016 திசெம்பர் 31 வரையில் வழக்கறிஞர் கட்டணமாக மன்றத்தால் ரூபா 120,000 செலுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வழக்கின் தீர்ப்பு வெளியிடப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1994 இன் 07 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்ற அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் நோக்கங்கள் பின்வருமாறு.

- வரலாற்று பின்னணியுடைய நகர மத்திய நிலையமொன்றாகவும் தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமொன்றாகவும் காலிக் கோட்டை மற்றும் அதன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பகுதியை மேம்படுத்தல், பேணுதல், பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

- காலிக்கோட்டை மற்றும் அதன் வரலாற்று பின்னணியுடைய நிலப்பரப்பினுள் அமைந்துள்ளதும் வரலாற்று பின்னணி, கலாசார மற்றும் அழகியல் பெறுமதி கொண்டதுமான சில அசையாத மற்றும் அசையும் சொத்துக்களை கைப்பற்றல், ஏற்றல், பேணிச்செல்லல் மற்றும் அகற்றுதல்.

- காலிக்கோட்டை மற்றும் அதன் வரலாற்றுப் பின்புலத்தில் அமைந்துள்ள வீடுகள், கட்டிடங்கள் மற்றும் ஏனைய ஆதனங்களை பாதுகாப்பதன் மூலம் காலிக் கோட்டையினுள் குடியிருப்போரின் அக்கறையினை மேம்படுத்தல்.

- காலிக்கோட்டை மற்றும் அதன் வரலாற்றுப் பின்புலமுடைய நிலப்பரப்பினுள் உட்பிரவேசித்து பார்வையிடுவதற்கு உரிய வசதிகளை ஏற்படுத்தல்.

- காலிக்கோட்டை மற்றும் அதன் வரலாற்றுப் பின்புலமுடைய நிலப்பரப்பினுள் குடியிருப்போரின் சாதாரண நலன்களை மேம்படுத்தல்.

- மேற்கூறிய அனைத்து நோக்கங்களையும் அல்லது அதில் சிலவற்றையாவது நிறைவேற்றுவதற்குத் தேவையான ஏனைய சகல செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கோட்டை மதிலுள்ள சில விற்பனைக்கூடங்கள் மற்றும் பல்வேறு இடங்களில் பல காலமாக அகற்றப்படாத போத்தல்கள் மற்றும் குப்பைகள் குவிக்கப்பட்டுள்ளதாகவும் கோட்டை மதிலின் யுத்த அறைக்கு மேலாக உள்ள மேல் தளத்திற்கு செல்வதற்கான இடத்தை கழுவி வெற்றிடமாகி அழிவடைந்தவாறு காணப்பட்டது.

(ஆ) காலிக் கோட்டையினுள் அமைந்துள்ள பழைய கச்சேரிக் கட்டிடத்தில் நடாத்திச் செல்லப்பட்டிருந்த காலி மரபுரிமை மன்றத்தின் அலுவலகம் 2012 திசெம்பர் மாதம் முதல் மாதமொன்றிற்கு 30,000 படியான வாடகை செலுத்தி காலிக் கோட்டையிலிருந்து புறம்பாக அமைந்துள்ள தனியார் கட்டிடமொன்றிற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. கோட்டையினுள்ளும் அதன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசத்திலும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அது தடையொன்றாகக் காணப்பட்டது.

(இ) தகவல் நிலையத்தின் வருமானம் முன்னைய ஆண்டின் போது ரூபா 52,929 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 32,480 வரை ரூபா 20,449 இனால் குறைவடைந்திருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றத்திற்கு அதிகளவு அதிகாரங்களை உரித்தாக்குதல் மற்றும் மன்றத்திற்கு வருமானம் ஈட்டும் முறையொன்றினை அமுல்படுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக 1994 இன் 7 ஆம் இலக்க காலி மரபுரிமைகள் மன்ற அதிகாரச்சட்டத்தினை திருத்தும் தேவைப்பாட்டினை இனங்கண்டு அதற்காக 2015 ஆம் ஆண்டில் அமைச்சரவை பிரமாணக்குறிப்பொன்று தயாரிக்கப்பட்டிருந்தெனினும், 2017 ஒக்தோபர் மாதம் வரையிலும் அந்த அதிகாரச்சட்டத்தின் திருத்த நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் கலாசார அலுவல்கள் அமைச்சினால் யுனெஸ்கோ அமைப்பிற்கு உலக மரபுரிமையான காலிக் கோட்டையினை பாதுகாத்தல் தொடர்பில் முன்வைக்கப்பட்ட முகாமைத்துவ திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் தொடர்பிலான பாதுகாப்புத் திட்டம் மற்றும் செயற்திட்ட அறிக்கைகள் தயாரிப்பதற்குரிய மன்றத்தின் செயற்பணி, பொறுப்பு மற்றும் மன்றத்தில் ஏற்படுத்தப்பட வேண்டிய கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் தொடர்பில் மன்றத்தினால் தெளிவான நோக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) யுனெஸ்கோ அமைப்பினால் காலிக் கோட்டையில் உலக மரபுரிமையாக பெயரிடப்பட்டிருந்ததுடன், அதற்கமைய காலிக் கோட்டையினை பாதுகாப்பதற்காக யுனெஸ்கோ அமைப்பிற்கு சமர்ப்பிக்கப்பட்ட முகாமைத்துவ திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் யுனெஸ்கோ அமைப்பின் வழிகாட்டிகளுக்கும் (Guidelines) இணங்க செயற்படுத்துவதற்கு காலி மரபுரிமை மன்றத்தின் முகாமைத்துவம் தவறியிருந்தது.

(ஈ) 17 ஆம் நூற்றாண்டின் முதற் காலப்பகுதிக்குரிய காலிக் கோட்டையில் அமைந்துள்ள அஞ்சல் அலுவலக கட்டிடத்தின் 1500 சதுர அடிகள் அளவான பாதுகாக்கப்படாத பகுதியின் கூரை 06 வருட காலமாக முழுமையாக துருப்பிடித்திருந்தது. இந்தக் கட்டிடத்தினை பாதுகாப்பதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் போதிளயவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) காலிக் கோட்டையினுள் ஏற்படக்கூடிய ஒழுக்கக் கேடுகள் ஏனைய அழிவுகளை தடுக்கும் நோக்கில் 2016 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய நலன்புரி வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புவதன் கீழ் சீசீரிவி கட்டமைப்பினை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் காலிக் கோட்டையினுள் தற்போது இனங்காணப்பட்டுள்ள 28 நிர்மாணங்களுக்கிடையே 06 இடங்களுக்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், எஞ்சிய 22 அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கு முகாமைத்துவ சபை தவறியிருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காலி மரபுரிமை மன்றத்தினால் ‘‘சிப்நாரா’’ சிற்றுண்டிச்சாலை 2015 செப்தெம்பர் 01 ஆந் திகதி முதல் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 50,000 ஆன மாதாந்த குத்தகை வாடகை அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், குத்தகையாளரால் வாடகை செலுத்தப்படாமையால் ரூபா 600,000 ஆன வருமானம் காலி மரபுரிமை மன்றத்திற்கு இழப்பாகியிருந்தது.

(ஆ) நிறுவனத்தின் தரவுகளை உள்ளீடு செய்வதற்காக டெக் ஈசி கணக்கீட்டு முறைமை 2005 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலும் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது டெக் ஈசி கணக்கீட்டு முறைமை சரியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறை

காலிக் கோட்டையின் மணிக்கூட்டுக் கோபுரத்தின் புனரமைப்பு 2 கட்டங்களின் கீழ் ரூபா 9,203,781 தொகையான மதிப்பீட்டிற்கு மணிக்கூட்டு கோபுரத்தின் உள்ளே பழுதுபார்த்தல் நடவடிக்கைகள், மரப் படிகளின் பழுதுபார்த்தல்கள் மற்றும் மின்சார பணிகள் பொறியியல் பணிகளுக்கான மத்திய உசாத்துணை பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முதலாவது கட்டத்தின் கீழ் ரூபா 5,520,478 தொகை செலவிடப்பட்டு மணிக்கூட்டு கோபுரத்தினுள் நீர்க் கசிவினை தடுப்பதற்காக பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மழை காணப்படும் சந்தர்ப்பங்களில் மணிக்கூட்டு கோபுரத்தினுள் நீர் பாய்ந்தோடுவதால் சுவர்கள் சிதைவடைந்தவாறு காணப்படுவதாக 2017 ஒக்தோபர் 11 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தளப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மதிப்பீட்டின் B-2 வேலை விடயத்தின் கீழ் மரப் படிக்கட்டின் இற்றுப்போன பாகங்களை அகற்றி புதிதாக முதலாம் தரத்திலான பலகைகள் இடப்பட்டு பழுதுபார்க்கப்பட்டு மரப்பலகைகளுக்கான பூச்சினை பூசுவதற்கு (Water Base) ரூபா 340,800 மதிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதன்போது தற்போதைய படிகளுக்கான நிறப்பூச்சுக்கள் மாத்திரம் பூசப்பட்டவாறு காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(இ) காலிக் கோட்டை மணிக்கூட்டு கோபுரத்தின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்குரிய மதிப்பீட்டில் வேலை விடயம் E இன் கீழ் மின்சார பணிகளுக்காக (Electrical Works) ரூபா 1,519,320 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,331,865 தொகையான செலவினம் 2016 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2017 ஒக்தோபர் 11 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தளப்பரிசோதனையின் போது மின்சாரக் கட்டமைப்பு செயலிழந்து காணப்பட்டது.

**4.5 தாமதமான செயற்திட்டங்கள்**

காலிக் கோட்டையில் காணப்படும் வெள்ளை மடத்தில் யுத்த அறை உள்ளடங்கிய விஜித வரலாற்றுடனான கண்காட்சி கூடமொன்றாக மாற்றியமைக்கும் பணி 2012 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 11,340,426 செலவிடப்பட்டுள்ள போதிலும், கண்காட்சிக் கூடத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2014 ஆம் ஆண்டளவில் ரூபா 3,180,000 செலவிடப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 12 சிலைகள் மற்றும் ரூபா 1,520,000 செலவிடப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 16 சித்திரங்கள் கண்காட்சிக் கூடத்தினுள் காட்சிப்படுத்துவதற்கு முடியாது 03 வருட காலமாக தகவல் நிலையத்தினுள் வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 684,351 செலவிடப்பட்டு கண்காட்சிக் கூடத்தினுள் பொருத்தப்பட்டுள்ள 02 வளிச்சீராக்கி இயந்திரங்களும் கணக்காய்வு சந்தர்ப்பமான 2017 செப்தெம்பர் மாதமளவில் செயலற்றுக் காணப்பட்டது.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காலி மரபுரிமை மன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 19 ஆக இருந்ததுடன் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்வாறு வெற்றிடங்களின் எண்ணிக்கை 08 ஆகும். அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய மன்றத்தின் பணிப்பாளர் பதவிக்காக 2007 ஏப்ரல் 11 ஆந் திகதி முதல் ஓய்வுபெற்ற பிரதேச செயலாளரொருவரும் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு 2006 சனவரி 03 ஆந் திகதியிலிருந்து ஓய்வுபெற்ற பெண் உத்தியோகத்தரொருவரும் வருடாந்தம் காலம் நீடிப்பு செய்து ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) 03 அபிவிருத்தி உதவியாளர் பதவிகளுக்காக கலாசார அமைச்சின் 03 கலாசார உத்தியோகத்தர்கள் இணைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், நிரந்தர பதவியொன்றினை நியமிக்காமை மற்றும் நிலவும் வெற்றிடங்களின் காரணமாக பாதுகாப்பு செயற்திட்டங்கள் மற்றும் ஏனைய வருமானமீட்டும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தாமதப்படுத்தப்படல் மற்றும் முகாமைத்துவ திட்டத்தினை பின்பற்ற முடியாதிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கணக்குகளை சமர்ப்பித்தல்

2005 சனவரி 27 ஆந் திகதிய பீஈடீ 27 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கமைய கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், காலி மரபுரிமை மன்றம் தனது நிதிக்கூற்றுக்களினை 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதியே சமர்ப்பித்திருந்தது.

### 5.2 கணக்காய்வு குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்திக்கமைய ஒவ்வொரு வருடமும் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், காலி மரபுரிமை மன்றத்தின் கணக்காய்வுக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல்நடவடிக்கை திட்டம்

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களினுள் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்குரிய செயற்திட்டங்கள் மற்றும் பிரதான பணிகளை இலகுவில் இனங்காணக்கூடிய வகையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 பெறுகைகள் திட்டம்

2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்திக்கமைய பெறுகைகள் நிறுவனத்தினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்காமை.<br>(ii) நிலையான சொத்துக்களை கணக்கு வைத்தல் தொடர்பில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்காமை. |

| | | |
|---|---|---|
| | | (iii) நிலையான வைப்புக்கள் தொடர்பில் ஆண்டின் இறுதியில் பௌதீக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிராமை. |
| | | (iv) மூலதனமாக்க முடியாத செலவினங்களினை நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனமாக்கப்படுகின்றமை. |
| (ஆ) | கணக்கீடு | (i) சொத்துக்கள் உரிய முறையில் வகைப்படுத்தப்படாமை |
| | | (ii) பரீட்சை மீதி மற்றும் பேரேட்டிற்கிடையே வேறுபாடொன்று காணப்படுகின்றமை. |
| | | (iii) நாளேட்டு கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் அவற்றிற்குரிய பதிவேடுகள் முன்வைக்கப்படாமை |
| | | (iv) கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள பெறுமானத்தேய்வு விகிதங்களுக்கமைய பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டிராமை. |
| (இ) | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் | (i) நிலுவை வாடகை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை. |
| | | (ii) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகளின் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிராமை. |